நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 44/2022**

<u>அ.சா.1 (LW – 1) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ்வரி | க/பெ. | : | கோபாலன் |
| கிராமம் | : | நாகமநாய்க்கன்பாளையம் | வட்டம் | : | கொடுமுடி |
| தொழில் | : | இல்லத்தரசி | வயது | : | 58 |

<u>29–10–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் கொடுமுடி வட்டம், நாகமநாய்க்கன்பாளையத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் கோபாலன். எதிரியை தெரியும். எனது கணவர் விவசாய வேலை செய்து வந்தார். எதிரியின் சகோதரி சங்கீதாவை எனக்கு தெரியாது. எனது ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளார். எனது மகள் பெயர் சிந்துதேவி. எனது மகளுக்கு திருமணமாகிவிட்டது. எனது மருமகன் பெயர் மோகன்பிரசாந்த். எனது மகன் பெயர் கண்ணன். எனது மகனுக்கு திருமணமாகிவிட்டது. எனது மருமகள் பெயர் ப்ரித்தி. 02–09–2021ம் தேதியில் காலை 9.00 மணிக்கு எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள எங்களது மாட்டு கட்டுத்தாரைக்கு சென்றேன். அங்கு எனது கணவரை காணவில்லை. காணவில்லை என்று எனது கணவரின் சிநேகிதனான குணசேகரினிடம் கேட்டேன். அதன்பிறகு எனது ஊர்காரர்கள் எல்லாம் சேர்ந்து எனது கணவரை தேடினார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து தேடினேன். அன்றைய தினம் காலை சுமார் 11.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது குணசேகரன் என்னிடம் வந்து எனது கணவரை கொலை செய்து ரவி என்ற வெங்கட்ரமன் கரும்பு காட்டில் போட்டுவிட்டதாக சொன்னார். அதன்பிறகு நான் ரவி என்ற வெங்கட்ரமனின் கரும்பு காட்டிற்கு சென்று பார்த்த போது எனது கணவர் மல்லாக்க செத்து கிடந்தார். எனது கணவரின் முகம் மற்றும் தலையில் காயங்கள் இருந்தது. அருகில் உடைந்துபோன பீர் பாட்டில் துண்டுகள் இருந்தது. அதன்பிறகு நான் கொடுமுடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்

நான் கொடுத்தது தான். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். அதன்பிறகு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பிரேதத்தை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். பிரேதத்தை நான் போலீசாருக்கு சம்பவ இடத்தில் வைத்து அடையாளம் காட்டினேன். எதற்காக எனது கணவரை கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எப்படி எனது கணவரை கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எனது வீட்டிற்கு வந்தார். மிளகுதக்காளிக்கீரை உள்ளதா என்று என்னிடம் வந்து எதிரி கேட்டார். எனது கணவர் காட்டுக்கு சென்றுவிட்டார் என்றும், மிளகுதக்காளிக்கீரை இல்லை என்று சொல்லிவிட்டேன். காட்டிற்கு சென்று எனது கணவரை பார்த்துக்கொள்வதாக எதிரி சொல்லிவிட்டு சென்றுவிட்டார். எதிரி சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. 29-10-2021ம் தேதியில் எதிரியை அடையாளம் காட்டச்சொல்லி எனக்கு அறிவிப்பு வந்தது. அதன்படி 29-10-2021ம் தேதியில் நான் சிறையில் வைத்து எதிரியை நீதிபதி அம்மாவிடம் அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக இரண்டு முறை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

02-09-2021ம் தேதியில் எனது வீட்டில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள். 17-10-2021ம் தேதியில் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். 02-09-2021ம் தேதியில் எத்தனை மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று தற்போது தெரியவில்லை. 02-09-2021ம் தேதியில் நான் மாட்டுக்கட்டுத்தாரைக்கு சென்று எனது கணவரை பார்த்ததில் அவர் அங்கு இல்லை என்பதை தெரிந்தற்கு பிறகு தான் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 02-09-2021ம் தேதியில் காலை 11.00 மணிக்கு மேல் தான் குணசேகரன் மூலம் எனது கணவர் இறந்துபோன விபரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு எனது கணவரின் பிரேதத்தை பார்த்தேன் என்றால் நேரம் தெரியவில்லை. நான் எனது கணவரின் பிரேதத்தை பார்த்தபோது முகம் மற்றும் தலையை தவிர எனது கணவரின் உடலில் வேறு எங்கும் காயங்கள் இல்லை என்றால் சரிதான். ரவி என்ற வெங்கட்ரமன் என்பவரின் கரும்பு காட்டிற்குள் வைத்து தான் முதன்முதலில் எனது கணவரின் பிரேதத்தை பார்த்தேன். எனது கணவர் இறந்துபோய்விட்டர் என்பதை தெரிந்தபிறகு தான் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடத்திற்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு மாட்டுக்கட்டுதாரைக்கு சென்ற விபரமும், அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு

எனது கணவர் இறந்துபோய்விட்டார் என்ற தகவல் எனக்கு கிடைத்த விபரமும் மருமகனுக்கும், மகளுக்கும் தெரியும் என்றால் சரிதான். நான், எனது மகள் மற்றும் மருமகன் ஆகியோர்கள் ஆலோசித்து தான் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் பக்கம் எண்.4ல் "இரவு 8 மணிக்கு வீட்டு வாசல் வீட்டில் இருந்து லைட்டை அணைத்துவிட்டு ஜன்னல் வழியே பார்த்தபோது ரவி என்கின்ற வெங்கட்ரமன் உடைய மோட்டார் ரூம் முன்பு எனது கணவர் ஒரு பைக்கில் பின்புறம் ஒரு பக்கமாக ஏறி உட்கார்ந்து கிழக்காக நொய்யல் நோக்கி போவதை பார்த்தேன். அந்த பைக்கில் என் கணவரை உட்கார்ந்து வைத்துக்கொண்டு ஓட்டி சென்றவர் யார் என்று தெரியவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் பக்கம் 5ல் "எனது கணவரை யாரோ ஏதோ காரணத்திற்காக பைக்கில் உட்காட்காரவைத்து அழைத்து சென்று பீர் பாட்டிலாலோ அல்லது கூர்மையான ஆயுதத்தாலோ குத்தி கொலை செய்து உள்ளார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் ஏற்கனவே எதிரியை அடையாளம் காட்டியதின் அடிப்படையில் சிறைச்சாலையில் நீதிபதியிடம் நான் எதிரியை அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான். எனது கணவர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எதிரி எனது வீட்டிற்கு வந்ததாக போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நான் முதல் விசாரணையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் தவறு.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 44/2022**

அ.சா.2 (LW – 2 ) சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிந்துதேவி | க/பெ. | : | மோகன்பிரசாத் |
| கிராமம் | : | ஆவாரம்பாளையம் | வட்டம் | : | கோயம்புத்தூர் |
| தொழில் | : | தனியார் நிறுவனம் | வயது | : | 38 |

29-10-2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் கோயம்புத்தூர், ஆவாரம்பாளையத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் மோகன்பிரசாத். எனது கணவர் எலெக்ட்மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனம் வைத்துள்ளார். அந்த நிறுவனத்தை எனது கணவருடன் நானும் பார்த்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். அ.சா.1 ராஜேஸ்வரி எனது தாயார். எனது தகப்பானார் பெயர் கோபாலன். எனக்கு உடன்பிறந்த தம்பி உள்ளார். எனது தம்பி பெயர் கண்ணன். எனது பெற்றோர்கள் நாகமநாய்க்கன்பாளையத்தில் குடியிருந்து வந்தார்கள். ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் பார்த்துள்ளேன். 01-09-2021ம் தேதி இரவு சுமார் 11 மணியளவில் எனது அம்மா எனக்கு போன் செய்து உங்க அப்பாவிற்கு உடம்பு சரியில்லாமல் ஆஸ்பித்ரி போய்வந்தார் என்றும், மாலை 6 மணிக்கு தோட்டத்திற்கு போவதாக சொல்லிவிட்டு உங்க அப்பா போனவர் இன்னும் வரவில்லை என்றும், இரவு 9 மணிக்கு மாட்டுக்கட்டுதாரைக்கு சென்று பார்த்த போது அங்கு யாரும் இல்லை என்றும், மாடு கன்னு போடுவதுபோல் உள்ளது என்றும், சுகர் அதிகமாகி கீழே விழுந்துவிட்டாரா என்று காந்தியை அழைத்துக்கொண்டு தேடியும் கிடைக்கவில்லை என்றும் என்னிடம் சொன்னார். அன்றைய தினம் இரவு 12 மணிக்கு எனது குழந்தைகள் மற்றும் கணவருடன் கோயம்புத்தூரில் இருந்து கிளம்பி அதிகாலை 2 மணிக்கு நாகமநாய்க்கன்பாளையத்திற்கு சென்றேன். எனது அப்பா வீட்டில் இல்லை. நாங்கள் தூங்கிவிட்டு காலையில் நாங்களும், எங்கள் ஊரில் உள்ள சொந்தகாரர்களும் எனது அப்பாவை

தேடிப்பார்த்தோம். எனது அப்பா காணவில்லை என்று அவரது நண்பரான குணசேகரன் என்பவருக்கு எனது கணவர் தகவல் கொடுத்தார். குணசேகரனும் எனது அப்பாவை தேடினார். ரவி என்ற வெங்கட்ராமனனின் கரும்பு காட்டில் எனது அப்பாவை கொலை செய்து போட்டு இருப்பதாக குணசேகரன் எல்லாருக்கும் தகவல் கொடுத்தார். அந்த தகவலை கேட்டு எனது கணவர் வீட்டிற்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு அந்த கரும்பு காட்டிற்கு காலை 9.30 மணிக்கு சென்றார். எங்க அப்பா கொலை செய்யப்பட்டு மல்லாக்க கிடந்தார். எனது அப்பாவின் முகம் முழுவதும் மற்றும் தலையிலும் காயங்கள் இருந்தது. பக்கத்தில் பீர் பாட்டில் கண்ணாடி துண்டுகள் கிடந்தது. எனது தாயார் கொடுமுடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நானும் காவல் நிலையத்திற்கு உடன் சென்றேன். மதியம் சுமார் 1.30 மணியளவில் போலீசார் பிரேதம் கிடந்த இடத்திற்கு வந்தார்கள். பிரேதம் எனது அப்பாவுடையது தானா என்று என்னிடமும், எனது அம்மாவிடமும் மற்றும் எனது கணவரிடமும் கேட்டார்கள். நாங்கள் எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டினோம். அதன்பிறகு பிரேதத்தை போலீசார் கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். அதன்பிறகு பிரேதத்தை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்று அங்கு போஸ்மாட்டம் செய்தார்கள். Homo sexயினால் எனது அப்பாவை எதிரி கொலை செய்துவிட்டாக போலீசார் சொன்னார்கள். 17-09-2021 தேதியில் எனது அப்பாவின் மொபைல்போன் காணவில்லை என்று போலீசாரிடம் நாங்கள் சொன்னோம். அந்த ஸ்மாட் போனை 2021ம் வருடம் பிப்ரவரி தான் எனது கணவர் எனது அப்பாவிற்கு வாங்கி கொடுத்திருந்தார். அந்த போனின் பில் மற்றும் போனின் பாக்சை போலீசார் கேட்டார்கள். நானும், எனது கணவர் மற்றும் எனது தாயார் ஆகியோர்கள் அந்த போனின் பில் மற்றும் போனின் பாக்சை போலீசாரிடம் கொடுத்தோம். போலீசார் வழக்கு சம்பந்தமாக இரண்டுமுறை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

01-09-2021ம் தேதியில் மாலை 6 மணிக்கு இறுதியாக எனது தகப்பனாரை எனது தாயார் பார்த்ததாக எனக்கு தகவல் சொன்னார் என்றால் சரிதான். 02-09-2021ம் தேதியில் காலை 9.00 மணிக்கு எனது தகப்பனாரை எனது தாயார் பார்த்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்துவிட்ட விபரம் எனக்கு காலை 9.30 மணிக்கு தெரியவந்தது. குணசேகரன் என்பவர் தொலை பேசி மூலம் எனக்கு சொல்லியதன் மூலம் தான் எனது தகப்பனார் இறந்த விபரம் எனக்கு தெரியவந்தது என்றால் எனது கணவர் எனக்கு சொல்லியதன் மூலம் தெரியவந்தது. எனது கணவருக்கு தகவல் தெரிந்த அடிப்படையில் தான் எனது தாயாருக்கும் தகவல் தெரிந்தது என்றால் சரிதான். நான், எனது தாயார் மற்றும் எனது

கணவர் காவல் நிலையம் சென்றபோது நல்ல மனநிலையுடன் தான் இருந்தோம் என்றால் சரிதான். காலை 9.30 மணியளவில் எனது தகப்பனாரின் பிரேதத்தை முதன்முதலில் பார்த்தேன். எனது தகப்பனாரின் பிரேதத்தை பார்த்தபோது அவருக்கு முகத்தை தவிர வேறு எங்கும் காயங்கள் இல்லை என்றால் எனது தகப்பனாரின் தலை மற்றும் முகத்தை தவிர வேறு எங்கும் காயங்கள் இல்லை. எனது தகப்பனார் பிரேதத்தின் தலையில் எந்த இடத்தில் காயங்கள் இருந்தது என்றால் தலை முழுவதும் இரத்தமாக இருந்ததால் எந்த இடத்தில் காயங்கள் இருந்தது என்று தெரியவில்லை. எனது தகப்பனாரின் பிரேதத்தை பார்த்தபோதே அவரது செல்போன் காணாமல் போகியுள்ளதை தெரிந்து கொண்டேன் என்றால் அப்போது தெரியவரவில்லை. செல்போன் காணாமல் போனவிரபத்தை எனது தாயார் புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போதே செல்போன் காணாமல் போய்விட்டது என்றும், செல்போன் காணாமல் போன விபரத்தை புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றும் போலீஸ் விசாரணையில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். செல்போன் பில் மற்றும் செல்போன் பாக்சை போலீசாரிடம் நாங்கள் கொடுத்தபோது எங்களிடம் போலீசார் தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் எனது அம்மாவிடம் மட்டும் கையொப்பம் வாங்கினார்கள். செல்போன் பில்லையும், செல்போன் பாக்சையும் எங்களிடம் இருந்து பெற்றதாக குறிப்பிட்டு அந்த தாளில் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு Homo sex பழக்கம் உள்ளதா என்றால் அவ்வாறான பழக்கம் எதுவும் இல்லை. எனது தகப்பனாருக்கு Homo sex பழக்கம் உள்ளதின் அடிப்படையில் தான் அவர் கொலை செய்யப்பட்டார் என்று போலீசார் சொல்லியது தவறு என்றால் எனது அப்பாவிற்கு Homo sex பழக்கம் இல்லை. எதிரியை எந்த தேதியில் காவல் நிலையத்தில் பார்த்தேன் என்றால் தெரியவில்லை. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து எதிரியை நான் பார்த்தேன் என்றால் தெரியவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தவறு.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 44/2022**

<u>அ.சா.3 (LW – 3 ) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன்பிரசாத் | த/பெ. | : | ரங்கநாதன் |
| கிராமம் | : | ஆவாரம்பாளையம் | வட்டம் | : | கோயமுத்தூர் |
| தொழில் | : | மோட்டர் உதிரி பாகம் தாயாரிக்கும் தொழில் | வயது | : | 39 |

<u>29–10–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் கோயம்புத்தூர், ஆவாரம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மின்மோட்டர் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.2 சிந்துதேவி எனது மனைவி. அ.சா.1 ராஜேஸ்வரி எனது மாமியார். எனது மாமனார் பெயர் கோபாலன். காவல் நிலையத்தில் வைத்து எதிரியை பார்த்துள்ளேன். 01–09–2021ம் தேதியில் இரவு 11 மணிவாக்கில் எனது அத்தை அ.சா.1 எனது மனைவியிடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டு எனது மாமனார் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு சென்று வந்தார் என்றும், இரவு சுமார் 7 மணியில் இருந்து எனது மாமனாரை காணவில்லை என்று சொன்னார். நான் எனது குழந்தைகள் மற்றும் எனது மனைவியை அழைத்துக்கொண்டு மறுநாள் அதிகாலை 2 மணிக்கு எனது மாமியார் வீட்டிற்கு சென்றேன். எனது மாமனார் அங்கு இல்லை. எனது மாமனாருக்கு சுகர் இருப்பதால் மயக்கம்போட்டு எங்காது விழுந்திருப்பார் என்று தேடினோம். எங்கள் உறவினர்களும் சேர்ந்து எனது மாமனாரை தேடினார்கள். எனது மாமனாரின் நண்பரான குணசேகரனுக்கு நான் போன் செய்து எனது மாமனார் அங்கு வந்திருக்கிறாரா என்று விசாரித்தேன். அவரும் கிளம்பி எனது மாமியார் ஊருக்கு வந்துவிட்டார். எல்லோரும் எனது மாமனாரை தேடிக்கொண்டிருந்தோம். குணசேகரன் என்பவர் என்னுடன் இருந்தவருக்கு போன் செய்து ரவி என்ற வெங்கட்ராமன் கரும்பு காட்டில் எனது மாமனார் இறந்துகிடப்பதாக

சொன்னார். அவர் என்னிடம் இந்த தகவலை சொன்னார். அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்று எனது மனைவி மற்றும் மாமியாரிடம் தகவல் சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு ரவி என்ற வெங்கட்ராமன் கரும்பு காட்டிற்கு சென்றோம். எனது மாமனார் மல்லாந்து இறந்துபோய் கிடந்தார். எனது மாமனாருக்கு ஏதோ வைத்து குத்தியது போல் முகத்தில் எல்லாம் இருந்தது. எனது மாமனார் தலையில் எல்லாம் காயங்கள் இருந்தது. எனது மாமனாரின் நெஞ்சு பகுதியிலும் காயம் இருந்தது போல தெரிந்தது. நான், எனது மனைவி, எனது அத்தை ஆகியோர்கள் கொடுமுடி காவல் நிலையம் சென்றோம். எனது அத்தை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பிறகு காவல் நிலையத்தில் இருந்து மதியம் சுமார் 1.30 மணிக்கு அந்த இடத்திற்கு வந்தார்கள். பிரேதத்தை நாங்கள் அடையாளம் காட்டினோம். அதன்பிறகு பிரேதத்தை போஸ்மாட்டம் செய்வதற்காக பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். குடிபோதையில் எனது மாமனாரை எதிரி கொன்று இருக்கலாம் என்று காவல் நிலையத்தில் சொன்னார்கள். 2021ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் எனது மாமனாருக்கு சாம்சங் ஸ்மாட் போன் வாங்கி கொடுத்திருந்தேன். எனது மாமனார் வீட்டில் இருந்து காட்டிற்கு சென்றபோது போனை எடுத்துக்கொண்டு தான் சென்றுள்ளார். அதன்பிறகு எனது மாமனாரின் செல்போன் காணவில்லை. போலீசார் எனது மாமனாரின் செல்போன் பில் மற்றும் செல்போன் பாக்சை கேட்டார்கள். 17-09-2021ம் தேதியில் அந்த செல்போன் பில் மற்றும் செல்போன் பாக்ஸ் ஆகியவைகளை நான், எனது மனைவி மற்றும் எனது அத்தை ஆகியோர்கள் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். என்னிடம் காட்டப்படும் 17-09-2021 தேதியிட்ட படிவம் 91ல் எனது கையொப்பங்கள் உள்ளது. என்னிடம் காட்டப்படும் 13-02-2021 தேதியிட்ட அசல் இன்வாஸ் தான் நான் போலீசாரிடம் ஒப்படைத்தது ஆகும். அந்த அசல் இன்வாஸ் **அ.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காட்டப்படும் செல்போன் அட்டைபெட்டியை தான் நான் போலீசாரிடம் ஒப்படைத்தேன். அந்த அட்டைபெட்டி **அ.சா.பொ.1** ஆகும். பிரேதத்திற்கு அருகில் பீர் பாட்டில் துண்டுகள் கிடந்தது. போலீசார் என்னை இரண்டு முறை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

02-09-2021ம் தேதியில் பிரேதத்தை எடுத்து சென்றபிறகு போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அந்த சமயத்தில் நேரம் என்னவென்று எனக்கு தெரியவில்லை. மதியத்திற்கு மேல் விசாரித்திருக்க வாய்ப்புள்ளதா என்றால் மதியத்திற்கு மேல் விசாரித்திருப்பார்கள். அவ்வாறு மதியத்திற்கு மேல் என்னை விசாரித்த சமயத்தில் தான் எனது மனைவி மற்றும் மாமியாரை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது மாமனார் இறந்த விபரத்தை காலை சுமார் 9.00 மணியளவில் நான் தெரிந்து

கொண்டேன். காலை சுமார் 9.25 மணியளவில் எனது மாமனாரின் பிரேதத்தை நான் பார்த்தேன். குணசேகரன் எனக்கு நேரடியாக போன் செய்து தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மாமனாரின் பிரேதத்தை நான் பார்த்த சமயத்திலேயே அவரது செல்போன் காணாமல் போய்விட்டது என்பதை நான் தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. எதிரியை எந்த தேதியில், எந்த நேரத்தில் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். செல்போன் பில்லும், செல்போன் பாக்சையும் போலீசாரிடம் ஒப்படைத்தபோது எனது மாமியாரிடம் போலீசார் கையொப்பங்கள் வாங்கினார்கள் என்றால் நான் கையொப்பங்கள் போட்டதது தான் எனக்கு ஞாபகம் உள்ளது. 17-09-2021ம் தேதியில் நான் காவல் நிலையம் சென்று செல்போன் பில் மற்றும் செல்போன் பாஸ் ஆகியவைகளை ஒப்படைத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. போலீசார் கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.